

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ.தாயார் திருமதி.தே. கண்ணம்மாள் மறைவையொட்டி கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் காந்தி நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். உடன் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., இ.ஜி.சுகவனம், டேம் டி வெங்கடேசன் மற்றும் கழக முன்னணியில் தோழர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.



தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நாஞ்சிக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ. தலைமையில் சுதந்திர தின கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் அவைத்தலைவர் கோவிந்தராஜ், கிளைச் செயலாளர்கள் ஜெயபால், சின்னப்பா, கோவிந்தராஜ், காவேரி கண்ணன், ஜான், பழனியப்பன், மணவாளன் ரவி,திரு லாரன்ஸ், திருமதி ரேவதி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் திருமதி வண்டார் குழலி, திருமதி கல்பனா, திருமதி நிம்மி சகாயராணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் கலந்து கொண்டனர்.

# நாகலாந்து ஆளுநர் இல.கணேசன் மறைவு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி இரங்கல்!

சென்னை, ஆக.17-

நாகாலாந்து ஆளுநரும், தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. கொள்கைகளைப் பரப்பிய முக்கிய கொள்கையாளருமான நண்பர் இல. கணேசன் அவர்கள் (வயது 80) மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், 15.8.2025 அன்று மறைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம்.

கொள்கையில் நேர் எதிரானவர்களான நாங்கள் இருவரும், நட்பில் நல்ல நண்பர்கள் என்பதை அவரது குடும்ப உறுப்பினர்கள் கூட நன்கு அறிவர். கொள்கை வேறு; பண்பாடு நட்பு வேறு.

மேடையில் பேசினாலும் நனி நாகரிகத்துடன் பேசி எவரிடத்திலும் அப்படியே நடந்து கொள்ளும் நல்ல மனிதர்.

அவரது மறைவு அவரது குடும்பத்தாருக்கும், அவரது இயக்கக் கொள்கையாளர்களுக்கும் மட்டும் இழப்பல்ல. பண்பான அரசியல் பொதுவாழ்வுக்கும் ஒரு பெரும் இழப்பு!

அவரது மறைவுக்கு நமது ஆழ்ந்த இரங்கலையும், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர்

# தே.மதியழகன் எம்.எல்.ஏ.தாயார் திருமதி.தே. கண்ணம்மாள் மறைவு!

## அமைச்சர் ஆர்.காந்தி – கழக முன்னணியினர் அஞ்சலி!

கிருஷ்ணகிரி, ஆக. 17-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் அவர்களின் தாயார் கண்ணம்மாள் இயற்கை எய்தினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஒன்றியம், ஆம்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த மறைந்த தேவராஜ் அவர்களின் மனைவியும், டி.உதயகுமார்

டி.வளையாபதி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் டி.மதியழகன், திருமதி.குணவதி மோகன் ஆகியோரது அன்பு தாயாருமான திருமதி.டி.கண்ணம்மாள் தேவராஜ் (வயது 92) அவர்கள் 15.08.2025 வெள்ளிக்கிழமை மாலை 06.30 மணிக்கு இயற்கை எய்தினார் அம்மையாரது உடலுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் காந்தி மற்றும் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ.. இ.ஜி.சுகவனம், டேம் டி.வெங்கடேசன் மற்றும் முன்னாள் இந்நாள் சட்டமன்ற , நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல மாவட்ட கழக செயலாளர்கள் பல மாவட்டத்தை சேர்ந்த கழக முன்னணியினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்

இதனை அடுத்து இறுதிச் சடங்கு நேற்று (16.08.2025 - சனிக்கிழமை) மதியம் 12.30 பர்கூர் அடுத்த ஆம்பள்ளி கிராமத்தில் உள்ள பண்ணை தோட்டத்தில் நடைபெற்றது.

### நெல்லையில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள

# அண்ணா விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டிகள்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்! மேயர் கோ.ராமகிருஷ்ணன் பங்கேற்பு!

நெல்லை.ஆக.17

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.8.2025 அன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கத்தில் ரூ.1 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள பாராவிளையாட்டு மைதானத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி, பாரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்த தாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்கள், விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும்,அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல்.உரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனடிப்படையில், இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு மாவட்டங்களில் சிறு விளையாட்டரங்கங்கள், பாராவிளையாட்டு மைதானங்கள், மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் மாணவர்களுக்கான ஹாக்கி விளையாட்டு முதன்மை நிலை மையத்தினை திறந்து வைத்துள்ளார்கள்.

அதன் ஒரு பகுதியாக, திருநெல்வேலி மாவட்டத்தில் அண்ணா விளையாட்டரங்கத்தில் பாரா விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில்,பாராவிளையாட்டு அரங்கம்,அரைவட்ட திறந்தவெளி மேற்கூரை கொண்ட பாரா இறகுப் பந்து, உட்கார்ந்து விளையாடும் பாரா கையுந்து பந்து, பாரா டேபிள் டென்னிஸ்,பாரா போச்சியா (Boccia),பாரா டேக்வொண்டோ,பாராஜுடோ ஆடுகளம்,பாரா கோல்பால் (Goal ball), செஸ்,கேரம் ஆகிய விளையாட்டு களுக்கான பன்னோக்கு உள்விளையாட்டரங்கம்,பாரா பளுதூக்குதல் அடங்கிய உடற்பயிற்சிக்கூடம்,சக்கர நாற்காலிகளுடன் அணுகும் வகையிலான சாய்வுதளம் கொண்ட ஆண்,பெண் இருபாலருக்கான கழிப்பறைகள் போன்ற பல்வேறு வசதிகளுடன் ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பாரா விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாரா விளையாட்டு பயிற்சிகளை மேற்கொண்டு இந்திய அளவிலும், உலகளவிலும் நடைபெறும் பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று திருநெல்வேலி மாவட்டத்திற்கும்,நமது மாநிலத்திற்கும் பெருமை சேர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சட்டபேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

தொடர்ந்து,அண்ணா விளையாட்டரங்கத்தில் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சி கூடத்தினையும் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

நிகழ்வில் மண்டல முதுநிலை மேலாளர் சிவா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் கிருஷ்ண சக்கரவர்த்தி மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர்,கனகராஜ்,சங்கர்நகர் பேரூராட்சி உறுப்பினர் முத்துராஜா, பயிற்றுநர்கள், விளையாட்டு வீர, வீராங்கனைகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தூய்மைப் பணியாளர்களின் சுயமரியாதையை பொறுப்புடன் பேணிக்காக்கும் அரசு நமது “திராவிட மாடல்” அரசு!

# மாண்பைக் காக்கும் முதல்வரின் அறிவிப்பை ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது!

## ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் – தலைவர் இரா.அதியமான் அறிக்கை!



சென்னை, ஆக.17-

“எளியோரிலும், வலியோராக இருக்கும் தூய்மைப்பணியாளர்களின் மாண்பை எப்போதும் விட்டுக்கொடுக்காது” என்பதை அமைச்சரவை கூட்டத்தின் மூலம் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நலன் காக்கும் அறிவிப்பினை ஆதித்தமிழர் பேரவை மனதார வரவேற்கிறது.

சாதியின் நிர்பந்தத்தால் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் மீது திணிக்கப்பட்ட தொழிலான தூய்மைப் பணி என்பது இழி தொழிலாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அது மனித மாண்பிற்கு எதிரான கூர்தீர்த்தப்பட்ட சவாலாகும்.

இந்த மனித மாண்பை பகுத்தறிவாலும் நவீனத்தாலும் மீட்க முடியுமே தவிர அவர்களை தூய்மைப் பணிக்கு நிரந்தரப்படுத்தி மலர் தூவி, கால் கழுவி புனிதப்படுத்தி மீட்டு விட முடியாது.

இன்றைக்கு நவீன தொழில்நுட்பத்தை நம் கைகளுக்குள் அடக்கிக் கொண்டாலும் “தூய்மை பணி நிரந்தரம்” என்ற புறவாசல் வழி தீண்டாமை நுழைவதை அறிவுடையோர் கண்டிக்க கடமைப் படுவார்கள்.

அர்ச்சகரும் வேண்டாம்.

தனியாரும் வேண்டாம்.

தூய்மைப் பணியாளரும் வேண்டாம்.

என்ற சிந்தனையோடு புதிய கருவிகளையும் நவீன தொழில்நுட்பங்களையும் பயன்பாட்டுக்கு கொண்டு வந்து மேலை நாடுகளைப் போல் தனி நபர் மற்றும் பொதுச் சுகாதாரத்தை, தான் பார்த்துக் கொள்வதைப் போல் நம் நாட்டில் இருக்கும் பொதுச் சுகாதாரத்தையும் தூய்மைப்பணியையும் பேணிகாக்க ஒவ்வொரு நபரும் பொறுப்பேற்க வேண்டும் என்ற சிந்தனை புகுத்தப்படுவது காலத்தின் அவசியம். மனிதனை வைத்து மனிதன் இழுத்த கை வண்டி ரிக்சாவை ஒழித்து சுயமரியாதையை மீட்ட தலைவர் கலைஞர் அவர்கள்.

தற்போது திமுக அரசுக்கு எதிராக சிலர் ரிப்பன் பில்டிங் அருகே தூய்மைப் பணியாளர்களை வைத்து போராட்டத்தை கூர்மைபடுத்திருக்கிறார்கள்.

மனித மலக்கழிவும் ஒவ்வாத குப்பைகளையும் முடைநாற்றமெடுக்கும் கழிவுகளையும் அப்புறப்படுத்தும் தூய்மைப் பணியை மனிதனை வைத்து தான் நிரந்தரமாக பணி செய்ய வேண்டும் என நிர்பந்திக்கும் தலைவர்கள் செயற்பாட்டாளர்கள் தங்களை ஒரு முறை பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

தற்போது தூய்மைப் பணியில் ஈடுபடுகின்றவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நலன் காக்கும் திட்டங்களை முதல்வர் அவர்கள் தெரிவித்திருப்பது ஆறுதல் அளிக்கின்ற நடவடிக்கையாகும்.

இருந்தபோதிலும் இந்த போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும். வரும் காலங்களில் மனிதனின் மாண்பை பாதுகாக்கின்ற வகையில் பொதுச் சுகாதாரம்.தூய்மைப் பணி என அனைத்திற்கும் புதிய புதிய கண்டுபிடிப்புகள் மூலம் நவீன இயந்திரங்களை இறக்குமதி செய்து மலக்குழி மரணத்தை தடுப்பதும் பொதுச் சுகாதாரம் மற்றும் தூய்மைப்பணி யிலிருந்து மனிதனை முழுவதும் விடுவித்து மாண்பையும் சுயமரியாதைதையும் பாதுகாக்க வேண்டும் என ஆதித்தமிழர் பேரவை சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் தலைவர் இரா.அதியமான் தெரிவித்துள்ளார்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

# தே.மதியழகன் எம்.எல்.ஏ. தாயார் கண்ணம்மாள் தேவராஜ் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.17-

சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் அவர்களின் தாயார் மறைவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

பர்கூர் சட்டமன்ற உறுப்பினரும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான தே. மதியழகன் அன்புத் தாயார் திருமதி. கண்ணம்மாள் தேவராஜ் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

அன்பு செலுத்தி, அரவணைத்து, ஆளாக்கி அகமகிழ்ந்த அன்னையின் மறைவால் வாடும் மதியழகன் எம்.எல்.ஏ. அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு எனது ஆறுதலைத் தெரிவித்தேன்.

அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கமலநாதன்

ஆகஸ்ட் 17 (1997)



தருமபுரி மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற இரு அவைகளிலும் உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

நெருக்கடி நிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.


“ஓர் இனிய நண்பனை மட்டுமல்ல; இலட்சிய வீரனையும் இழந்தேன்” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தம்பி ஏ. தேவேந்திரன்

ஆகஸ்ட் 17 (1995)



திராவிட இயக்க கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தி.மு.கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து 38 ஆண்டுகளாக நகர்மன்ற உறுப்பினராகவும், மயிலாடுதுறை நகர்மன்றத் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கல்லக்குடி, கருப்புக் கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று 17 முறை சிறை சென்றவர்.

“மதுரைக்கு முத்து, மாயூரத்திற்கு தம்பி தேவேந்திரன்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.